Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM    மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14    திருவள்ளுவர் ஆண்டு 2034    ஐப்பசி-03    20-10-2003    திங்கட்கிழமை    ஓசை 244




# ஒக். 31இல் இடைக்காலத் திட்ட வரைவு புலிகளால் அரசிடம் சமர்ப்பிக்கப்படும்!

## புலிகள் வட்டாரத்திலிருந்து தகவல்

(கிளிநொச்சி)

**இடைக்கால நிர்வாக சபைக்கான விடுதலைப்புலிகளின் திட்ட வரைவு 31ஆம் திகதி நோர்வே அரசு ஊடாகச் சிறிலங்கா அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறை வட்டாரங்களில் இருந்து அறிய வருகின்றது.**

இத்திட்ட வரைவினை எதிர்வரும் தீபாவளி யன்று சமர்ப்பிப்பதற்கான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டி ருந்தபோதிலும் அது சாத்தியப்படாத நிலை தோன்றியுள்ளதினால், இம்மாதத்தின் இறுதி நாளான 31ஆம் திகதி இவ் இடைக்கால நிர்வாக சபைக்கான திட்ட வரைவினைப் புலிகள் சமர்ப்பிக்கவுள்ளதாக அறிய வருகின்றது.

விடுதலைப்புலிகளின் இத்திட்ட வரைவானது பரந்துபட்ட ரீதியிலான அதிகாரங்களைக் கொண்டதாகவும், சர்வதேச சட்ட விதிமுறைக்கு உட்பட்டதாகவும் இருக்கும் என அரசியல் வட்டாரங்கள் எதிர் பார்க்கப்படுகின்றது. இதேவேளை, விடுதலைப் புலிகளின் திட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டதும் விடுதலைப்புலிகளுடன் எவ்வளவு விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியுமோ அந்தளவு விரைவாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத் தரப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் காங்கிரஸ் குழு பிரித்தானியாவிற்கு விஜயம்

### முஸ்லிம்களின் திட்ட வரைவினை தயாரிக்குமாம்

(லண்டன்)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியலமைப்பு விவகாரக் குழு எதிர்வரும் 25ஆம் திகதி பிரித்தானியாவிற்கு விஜயம் செய்யவுள்ளது.

முஸ்லிம் மக்கள் தொடர்பான நிலைப்பாட்டை ஆராய்ந்து அது குறித்த திட்டவரைவொன்றை முன் வைப்பதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் இக்குழு செல்லவுள்ளது.

இந்தக் குழுவில் முன்னாள் நீதிபதி அசீஸ், புத்தளம் முன்னைய நகர முதல்வர் பாயிஸ், சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஜயம்பதி விக்கிரமரத்தினா ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

பிரித்தானிய வெளிவிவகார பொதுநலவாய திணைக்களத்தின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் இந்தியா பயணம்

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். நேற்று இரவு 7.15 மணியளவில் UL 191 ரக சிறிலங்கன் எயார் லைன்ஸ் வானூர்தியில் அவர் புது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வெடிபொருளினால் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

விளையாடிக் கொண்டிருந்த போது படையினரால் கைவிடப்பட்ட வெடிபொருள் ஒன்று வெடித்துச் சிதறியதில் சிறுவன் ஒருவன் காயமடைந்துள்ளான்.

நேற்று முன்தினம் கோப்பாய் திடல் பகுதியில் நடைபெற்ற இச்சம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொபி அனானின் விஜயம்

(லண்டன்)

இலங்கைக்கான விஜயம் தொடர்பாக மீள் ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வதாக ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் அறி வித்துள்ளார்.

இது குறித்து ஐ.நா. சபைக்கான இலங்கைப் பிரதிநிதி சாவிம

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-கூட்டமைப்பு புதனன்று சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்வரும் புதன்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளைச்சந்திக்கவிருக்கின்றனர். இந்தச் சந்திப்பு கிளிநொச்சியில் இடம்பெறவிருக்கிறது.

இதற்காகத் தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சுரேஷ் பிறேமச்சந்திரன் அணி ஆகியவற்றிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கான அழைப்பு அதன் செயலர் ஆர்.சம்பந்தனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின் போது வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம் மக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடகிழக்கு முஸ்லிம் பா.உ.கள் தமிழ்க் கூட்டமைப்பு இன்று சந்திப்பு

வட-கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையே விசேட சந்திப்பு இன்று இரவு கொழும்பில் நடைபெறவுள்ளது.

அரசிற்கும், புலிகளுக்குமிடையே இடம்பெறும் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் பிரதிநிதிகள் தனித் தரப்பினராகக் கலந்துகொள்ள வேண்டுமெனக் கூறி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை குறித்து இச் சந்திப்பின் போது ஆராயப்படுமென ஒன்றியத்தின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான லதிஸ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பெண் பிரதிநிதி மீது கண்டியில் பலாத்கார முயற்சி

### இராணுவ மேஜர், கப்டன் தர அதிகாரிகள் கைது

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியான பெண் ஒருவர் மீது பலாத்காரம் மேற்கொள்ள முயன்ற இராணுவ மேஜர் தர அதிகாரி ஒருவரும், கப்டன் தர உறுப்பினர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு கண்டியில் இடம்பெற்றுள்ளது. நைஜீரிய நாட்டுப் பெண்ணான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி தங்கியிருந்த விருந்தக அறைக்குச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சு.க.வின் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதுபற்றி முடிவில்லை

### கம்யூனிஸ்ட், ல.ச.ச.கட்சிகள் தெரிவிப்பு

இம்மாதம் 24ஆம் திகதி அரசாங்கத்திற்கு எதிராக நடக்க இருக்கும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்கு, லங்கா சமசமாஜக் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அழைப்பு விடுத்துள்ளது. எனினும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதா இல்லையா என்று இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என சமசமாஜக் கட்சிச்செயலாளர் பட்டி வீரக்கோனும் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் டி.யு.குணசேகராவும் தெரிவித்துள்ளனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி சனாதிபதி சந்திரிகா இப்பேரணியை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய இராணுவ உயர் அதிகாரி இவ்வாரம் கொழும்பிற்கு விஜயம்!

(கொழும்பு)

இந்திய இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் ஜி.எஸ்.சிறோடா இந்த வாரத்தில் இலங்கைக்கு வர விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இந்திய தென்பிராந்திய பூனே படைத்தளத்தின் கட்டளை அதிகாரி ஆவார். இலங்கை இந்திய நாடுகளுக்கிடையில் இராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பிலேயே இவரது விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (32)

## பொலிஸ்மா அதிபரை நியமிக்காவிடின் பிரதமருக்கு எதிராக வழக்கு

### சிஹல உறுமய கூறுகின்றது

எதிர்வரும் சில வாரங்களுக்குள் புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்காவிட்டால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் உள்நாட்டு அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கும் எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என சிஹல உறுமயக் கட்சி கூறியுள்ளது. 17ஆவது அரசியலமைப்பு சட்டத்தின்படி பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் பூரண அதிகாரம் யாப்புத் திருத்தச்சபைக்கும் தேசிய பொலிஸ் சபைக்கும் உள்ளதென அக்கட்சி மீண்டும் தெரிவித்துள்ளது.

## கடற்புலிகளைச் சேர்ந்தவர் வதிரியில் பொலிசாரால் கைது

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் உறுப்பினர் ஒருவரை நேற்று முன்தினம் நள்ளிரவில் அவரது வீட்டில் வைத்து பொலிசார் கைது செய்துள்ளனர்.

வதிரி, கரவெட்டிப் பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டில் குடும்பத்தவர்களுடன் தங்கியிருந்த இவரை சுற்றிவளைத்துப் பருத்தித்துறைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மேற்படி போராளி பருத்தித்துறை நீதவான் க. அரியநாயகம் அவர்களது யாழ்ப்பாணத்திலுள்ள வாசஸ்தலத்தில் நேற்று பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைப்பதற்கான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் வந்த புலிகளின் கப்பல் முல்லைக் கடலில் மர்ம மறைவாம்

### சனாதிபதி, பிரதமர் தனித் தனியாக விசாரணை

முல்லைத்தீவுக் கடலில் தரித்து நின்று பின்னர் தப்பிச்சென்றதாகக் கூறப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளது என சந்தேகிக்கப்படும் ஆயுதக் கப்பல் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவு சமாதான செயலகத் தலைவர் பேணாட் குணதிலக்கவிடம் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மீனவர்களிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமான கப்பலைத் தாம் சோதனை செய்ய முயன்றதாக கடற்படையின் பேச்சாளர் கப்டன் ஜயந்த பெரேரா தெரிவித்தார். எனினும் இந்தக் கப்பலைச் சோதனையிடும் (முன்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குத் தகவல் அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் இந்த விடயம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குத் தெரிந்து விட்டதையடுத்து குறிப்பிட்ட கப்பல் தாம் தெரிவித்த இடத்திலிருந்து காணாமல் போய்விட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தொடர்பாக
# சிறிலங்காப் பிரதமருடன் கூட்டமைப்பினர் மகஜர் சமர்ப்பித்துப் பேச்சு

வடக்கு கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை உடன் நிரந்தர நியமனம் செய்யு மாறு கோரும் மனுஒன்றைக் கடந்த 16ஆம் திகதி தமிழ்க் கட்சிக்கூட்ட மைப்பு சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் நாடாளு மன்றில் வைத்துக் கையளித்து பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுநடத்தியுள்ளார். இக்கலந்துரை யாடல் 4மணி தொடக்கம் 5.30 வரை இடம்பெற்றுள்ளது. வேறு முக்கிய விடயங்களும் இங்கு கலந்துரையாடப் பட் டுள்ளன. மனுவின் பிரதிகள் பிரதமரின் செய லாளர் மற்றும் புதிய நியமனங்க ளுக்குப் பொறுப்பான பிரதிப்பணிப் பாளர் திருமதி கரியவாசம் ஆகி யோருக்கும் வழங்கப்பட்டன. அவ் வேளையில் பிரதமர் ரணில் விக்கிர மசிங்க திறைசேரி தொடர்பான விப ரத்தை பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விடயம் தொடர்பாகப் பரிசீலிப்பதற்கு வழங்குமாறு செய லாளர் பிரட்மன் வீரக்கோனிற்குப் பரிந்துரைசெய்தார். வரும்வாரம் வியாழக்கிழமை அளவிலான பிரதமருடனான சந்திப்பில் நல்ல முடிவொன்று காணப்படவிருப்பதாக இரா.சம்பந்தன் நம்பிக்கை தெரிவித் தார். தொடர்ந்து பாடசாலை புறக் கணிப்பில் ஈடுபட்டுவரும் இவ் ஆங் கில ஆசிரியர்கள் தமது நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை 23 நாட்களையும் கடந்து உண்ணாவிர தம் மேற் கொண்டு வருகின்றனர். திருகோண மலையில் கல்வியமைச் சக பணி மனை முன்பாக இப் போராட்டம் தொடர்கிறது என பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

# இடம் பெயர்ந்தோர் நிவாரணத்திற்கு கோதுமை மாவை நிறுத்த முடிவு

(அலுவலக செய்தியாளர்)

அத்தியாவசிய சேவைகள் ஆணை யர் மூலம் கிளி. மாவட்டத்தில் இட் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்ப பெற்றுவரும் உலர் உணவு நிவார ணத்திற்கான கோதுமை மா அக்டோ பர் மாத இறுதிமுதல் நிறுத்தப்பட வுள்ளதாகத் தெரியவந் துள்ளது.

இது குறித்து கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் சென்ற காலபோக சிறுபோக நெற்செய்கை யில் ஈடுபட்ட விவசாயிகளின் நெற்கள பெருமளவு சந்தைப் படுத்தமுடியாத நிலையில் உள்ளதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக இனிவரும் காலங களில் கிளிநொச்சியில் நெற்செய்கை யில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் நெற்செய்கையினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென தெரிவித்துள்ளனர்.

இதற்கமைவாக விவசாயிகளின் இப்பிரச்சினையை நிவர்த்திசெய்யும் முகமாகவும் தவிடு நீக்கிய சத்தற்ற கோதுமை மாவினை மக்கள் பாவ னையிலிருந்து குறைக்கும் முகமா கவும், இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்றுள்ள தெனவும்,

இனிவரும் காலங்களில் உலர் உணவு நிவாரணத்தில் கோதுமை மாவுக குப்பதிலாக அரிசியினை வழங்குவ தென தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார். (சோ)

## முள்ளியவளைப் பிரதேசத்தில்
# மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு மானியமாக விதை நெல் வழங்கல்

முள்ளியவளைப் பிரதேசத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்க ளுக்கு மானியமாக உலக விவசாய ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் முள்ளி யவளைப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் முள்ளியவளை கமநல அபிவிருத்தி சேவையினரும் இணைந்து 2003/2004 ஆண்டிற்கான கால போக செய்கைக்கான விதை நெல்லினை வழங்கியுள்ளனர்.

மேற்படி நிகழ்வானது முள்ளிய வளை .கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி இராசலட் சுமி தலைமையில் நடைபெற்றது. நெல் வழங்கலின் முக்கியத்துவம் அதன் பயன்படுத்தல் பற்றிய கருத் துரையினை உலக விவசாய ஸ்தா பன இணைப்பாளர் இராசநாயகம், உலக விவசாய ஸ்தாபன தமிழீழ பொருண்மிய மேமபாட்டு நிறுவனப் பொறுப்பாளர் க. தமிழரசன், வலயப் பொறுப்பாளர் அ. ஈழவன் ஆகியோர் நிகழ்த்தியதையடுத்து உலக விவ சாய ஸ்தாபன பிரதிநிதிகளான இராசநாயகம், கரிராம் ஆகியோர் பயனாளிகளுக்கு நெல்லினை வழங் கினர். பயனாளிகளுக்கான உரத் தினை (பசளை) க. தமிழரசன், அ. ஈழவன் ஆகியோர் வழங்கினர். த.பொ. மே. நிறுவன முள்ளியவளைப் பிரதேச இணைப்பாளர் இ. ரமேசின் நன்றி யுரையுடன் நிகழ்வு நிறைவானது. (ஆ)

# சிலாவத்தையில் இரு பாடசாலைகள் இணைக்கப்பட்டு தரமுயர்த்தல்

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் அமைந்த இரண்டு பாடசாலை களை ஒன்றாக இணைத்து தர உயர்வுடன் தமிழ் வித்தியாலயம் என புதிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிலாவத்தை இ.த.க.பாடசாலையும், சிலாவத்தை றோ.க.பாடசாலை யுமே ஒன்றாக இணைக்கபபட்டு புதிய பாட சாலை தரம் 2 உயர்வுடன் சிலாவத் தைப் பகுதியில் தமிழ் வித்தியால யமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையின் ஆரம்ப நிகழ்வானது கடந்த 15ஆம் திகதி அன்று மேற்படி இரு பாடசாலைக ளின் அபிவிருத்திக் குழு செயலா ளர்கள் மங்கல விளக்கினை ஏற்றி வைக்க கரைதுறைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி ஜீ.எஸ். பரமேஸ் வரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. சிவராசா ஆகியோரால் ஆரம் பித்து வைக்கப்பட்டது. இப்பாடசா லையின் அதிபராக க. திருக்குமரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பாடசாலை தரம் 01 தொடக் கம் தரம் 9 வரையான வகுப்புக்களை கொண்டுள்ளது. சுமார் 250 மாணவர் கள் கற்றலை ஆரம்பித் துள்ளனர். மேற்படி பாடசாலை சகல பௌதீக வளங்களுடனும் தம்மிடம் கையளிக் கப்பட்டுள்ளதாக மேற்படி தமிழ் வித்தியாலய அதிபர் க. திருக்கு மரன் தெரிவித்துள்ளார். (ஆ)

# தீபாவளி தினத்தில் சு.க. ஆர்ப்பாட்டம்; இல. தொழிலாளர் காங்கிரஸ் கண்டனம்

(கொழும்பு)

தீபாவளி தினமான வெள்ளிக் கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி திட்ட மிட்டுள்ளது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

சுதந்திரக்கட்சியின் இந்தக் கீழ்த் தரமான அரசியல் பிரச்சாரத்தை அலட்சியம் செய்து விடுமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொழிலாளர் காங்கிரஸ் விடுத் துள்ள அறிக்கை ஒன்றில் இந்து மக்களின் மிக முக்கிய பண்டிகை யான தீபாவளி சமய உணர்வுடன் கொண்டாடப்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி அன்றைய தினத் தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளமை சிறு பான்மை மக்களின் உணர்வுகளையும் தேவைகளையும் அது மதித்து நடக்க வில்லை என்பதையே காண்பிக் கின்றது என்று இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஆ)


## பிரிவின் வலியில்...
### அமரர் பரராசசேகரம் பார்த்தீபன்



அவசரமென நாம் வரும்போது
அதே புன்னகையுடன் உதவிடுவாய்
அன்புகொண்ட அரவணைப்பில்
அழியாதுஇடம்பிடித்தாய்
பெற்றுவிட்ட உன் நட்பால்
பேரின்பம் அடைந்திருந்தோம்
பேரியாய் போய்விட்டாய்
பிரிவின் வலியில் வாடுகின்றோம்.

தோற்றம் 29-11-1971 மறைவு 17-10-2003

உன் இழப்பால் வாடும் குடும்பத்தினருக்கும் எம் ஆறுதல்கள்! ஆறுதல்கள்!

அன்போடு ஏங்கும்
தமிழீழ இசைக்கலைஞர்களுடன்
தமிழீழ இசைப்பறவைகள் இசைக்குழுவும்,
நிதர்சனம் நிறுவனமும்.

(சி-8665)



## கணினி பயிற்சி நெறி விண்ணப்பம் கோரல்

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு நடாத்தும் கணினிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி நெறி – MS OFFICE

இடம் – கிளி/இராமநாதபுரம் ம.வி. வட்டக்கச்சி.

23.10.2003 காலை 10.00 மணிக்கு சுயமாக தயாரிக்கப் பட்ட விண்ணப்பத்துடனும் தேவையான ஆவணங்களு டனும் நேர்முகத்தேர்வுக்கு சமுகம் தரவும்.

(3113) தமிழீழ மாணவர் அமைப்பு



## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 19 04 1982



வீரச்சாவு 20 10 2000

### 2ஆம் லெப். புயலவன்
### (குமாரசிங்கம் கேதீஸ்வரன்)

2ஆம் வட்டாரம், கோம்பாவில், மு/புதுக்குடியிருப்பு.
சம்பவம்: –நாகர்கோவில் பகுதியில் ஓயாத அலைகள் 04 மோதலின்போது.

கல்லறையில் துயில் கொள்ளும் -எங்கள்
கண்மணியே தீசா
பள்ளிப்பருவத்திலே பேனா தூக்கிய உன்கரம்
தாயகம் காக்கவெனத் துப்பாக்கி தூக்கப் புறப்பட்டதோ
போர் முழக்குடன் அலை அலையாய் வந்த எதிரிகளை
ஓயாது நின்று ஓடோட விரட்டி அடித்து
வெற்றிகள் பல குவித்த வீரப்புயலே புயலவா!
உன் வீரம் கண்டு உன் வரவிற்காய் காத்திருக்க...
வந்ததோர் செய்தி - நாகர் கோவிலில்
ஓயாது நின்ற "ஓயாத அலை புல்"
ஓய்ந்து போனான் புயலவன் என....
திகைத்தோம்.... பதறினோம்... அழுதோம்...
எம் கண்களில் கண்ணீரோ இன்னும் ஓயவில்லையடா
சென்றதோ 3 ஆண்டு... நெஞ்சு வெடிக்குதடா

புயலவனுடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் அவரின் உடன் பிறவா சகோதரர்களாகிய மாவீரர்கள் குணா, கானகன், திலகன், ஈழச்செழியன் ஆகியோருடன் ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

தகவல்:
திரு. திருமதி குமாரசிங்கம்.
குடும்பத்தினர்,
உறவினர்கள்.

(3716)



## சாவு அறிவித்தல்

கல்விளான் குளத்தில் வசித்துவரும், புதிய ஒழுங்கை, மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை செல்லத்துரை 17-10.2003 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சரவணை செல்லாச்சி (மட்டுவில்) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா, சின்னத்துரை (மட்டுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசு [உதவிக்கல்விப்பணிப்பாளர், வடமேல் மாகாணம்], இராமலிங்கம் [இ.போ.ச.மன்னார்], காலஞ்சென்ற விமலாதேவி, ஜெகதீஸ்வரன், குணராசா [உதவிமுகாமையாளர், இ.போ.ச. வவுனியா], சபாநாதன் [வி.ரி.எஸ். மல்ரிசேவிஸ் வவுனியா,மஸ்தான் ரேடேர்ஸ் வவுனியா], தங்கராசா [பாரிஸ்], அன்பரசி, ரதிதேவி [முள்ளியவளை] ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீலகுமாரி [ஆசிரியை மாவத்தகம], தவமணிதேவி [ஆவரங்கால்], புஸ்பநாயகி [வவுனியா], நந்தினி [ஆசிரியை சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா], உதய சரஸ்வதி [முள்ளியவளை], இலங்கேஸ்வரன்[ முள்ளியவளை] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை கள் முள்ளியவளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 18.10.2003 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மகன் சபாநாதன்,
இல 5, 3ஆம் ஒழுங்கை,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.

(3717) தொலைபேசி இல: 024-2222720, 2221789






யப்பானிலிருந்து பிலிப்பைன்ஸ் சென்றுள்ள அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் பிலிப்பைன்ஸ் சனாதிபதி குளோரியா மக்கபகள் அரோயாவுடன் இராப்போசனத்தில் கலந்துகொள்வதையும் அவரது வருகையை எதிர்த்துத் தலைநகர் மனிலாவில் ஆர்ப்பாட்டம் நடத்துவோரையும் காண்க.

# சனநாயகத்தை நிலைநிறுத்த அமெரிக்கா நிர்ப்பந்தம்

மியன்மாரின் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகி கடந்த மே மாதம் முதல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மியன்மாரின் சனநாயகத்தை நிலை நாட்ட இயன்ற சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அமெரிக்கா தாய்லாந்திடமும் அதனை சுற்றியுள்ள நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளது.

மியன்மாரில் சாதகமான முன்னேற்றங்கள் இடம் பெற்று வருவதாக தென்கிழக்கு ஆசியான் சங்க நாடுகள் வெளியிட்ட அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. என்று அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது.

ஆசியான் சங்க நாடுகள் மியன்மாரில் சனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு தங்களால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் தெரிவித்துள்ளார்.

## சீனாவில் நிலநடுக்கம்!

சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக சீனாவின் தென்மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் 3 பேர் கொல்லப்பட்டதுடன் 46 பேர் காயமடைந்துள்ளனர்

189,000 மக்களின் வீடுகள் நிலநடுக்கத்தால் சேதமடைந்துள்ளன. இவற்றைப்புனரமைக்க 1.2 மில்லியன் டொலர் தேவையென சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# சுயநிர்ணய உரிமைக்காக காஷ்மீரில் வாக்கெடுப்பு; இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு தீர்மானம்!

## - இந்திய தரப்பில் கடும் விசனம்

**இந்தியா ஜம்மு காஷ்மீரில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றமை கண்டனத்திற்குரியது என்றும் இம் மாநிலத்தில் சுயநிர்ணய உரிமை குறித்த வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் இஸ்லாமிய நாடுகளின் அமைப்புத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதற்கு இந்தியா கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.**

இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு ஜம்மு-காஷ்மீர் குறித்து எடுத்துள்ள தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்துள்ள இந்தியாஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலும் இந்திய பாகிஸ்தான் உறவுகள் சீர்கெட அடிப்படைப் பிரச்சினையான எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை இந்தக் குழு புறக்கணித்திருப் பது வருத்தம் அளிப்பதாகக் கூறியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை மற்றும் இந்திய பாகிஸ்தான் உறவு ஆகியன தொடர்பாக ஒரு தனிப்பட்ட நடுநிலையான கருத்தை இஸ்லாமிய நாடுகள் எட்ட முடியாது என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஜம்மு- காஷ்மீரில் இந்தியாவின் மனித உரிமை மீறல்களைக் கண்டனம் செய்துள்ள இந்த அமைப்பின் அறிக்கை, ஜம்மு-காஷ்மீரில் சுயநிர்ணய உரிமை குறித்த வாக்கெடுப்பு நடத்தப்பட, வேண்டும் என்று பாகிஸ்தானின் கோரிக்கையை ஆதரித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் தொடர்ந்து நடத்தி வரும் பயங்கரவாத நடவடிக்கை பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்படாதது ஆச்சரியம் அளிப்பதாக செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது முறையாகப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுக்கு நட்புக்கரம் நீட்டியிருப்பது பற்றிக் குறிப்பிட்ட அவர், உண்மை நிலை குறித்துத் தவறான தகவல்களைக் கூறி இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு நாடுகளைத் திசை திருப்புவதை விட்டு விட்டுப் புதுடில்லியின் இந்த முயற்சிக்குப் பாகிஸ்தான் சாதகமான பதில் அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.



பாக்தாத்துக்கு அண்மையிலுள்ள சாதர் நகரில் அமெரிக்கப் படைகளை உற்று நோக்கும் ஈராக் சிறுவர்கள்.

# இஸ்ரேலுடன் யுத்தநிறுத்தம்; அமெரிக்காவில் ஆராய முடிவு

பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தின் பாற்றா இயக்கத்தை சேர்ந்த மூன்று சிரேஷ்ட அதிகாரி கள் இஸ்ரேலுடன் யுத்த நிறுத்தத் தைக் கடைப்பிடிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற் காக அமெரிக்கா செல்லத் திட்ட மிட்டு வருகின்றனர்.

மேற்குக் கரையிலும் காஸா பிரதேசத்திலும் பலஸ்தீன இராச்சியம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்குடன் மூன்று வருடங்களாகப் போராடி வரும் பாற்றா இயக்க பிரதிநிதிகள் முதல் தடவையாக அமெரிக்க காங்கிரசின் சனநாயக கட்சி உறுப்பினர்களின் அழைப்பை ஏற்று வாஷிங்டன் செல்லவுள்ளனர்.

பலஸ்தீன பாராளுமன்ற உறுப்பினர் சத்தீம் அப்துல்காதர் இது பற்றி தெரிவிக்கும் போது தாமும் இன்னும் இரண்டு சகாக்களும் அமெரிக்கா செல்லவிருப்பதாகக் கூறினார்.

# முகாம்களை அகற்றி பயங்கரவாதத்தை நிறுத்துக பாக். இடம் ரஷ்ய சனாதிபதி கோரிக்கை

(மொஸ்கோ)

இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதத்தை நிறுத்திக் கொள்ளுமாறும் தனது நாட்டில் உள்ள பயங்கரவாத முகாம்களை அகற்றுமாறும் ரஷ்ய சனாதிபதி விளாமிர்டபுட்டின் பாகிஸ்தானைக் கேட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான எல்லை கடந்த பயங்கரவாதம் தொடர்வது குறித்து கவலை தெரிவித்த அவர் இந்த நிலைமை தொடர்பாக பாகிஸ்தான் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுக்கு நேசக்கரம் நீட்டியிருப்பதை வரவேற்ற புட்டின் முக்கிய சர்வதேச பிரச்சினைகளில் இரு நாடுகளும் கருத்தொற்றுமை கொண்டுள்ளன என்றும் பாதுகாப்புத்துறை பொருளாதார ஒத்துழைப்பு குறித்து ரஷ்யா வரும் வாஜ்பாயுடன் விவாதிக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

# பேச்சுக்கள் ஆரம்பமானால் ஆக்கிரமிப்பையே விவாதிப்போம்

## வாஜ்பாய் கூறுகிறார்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகினாலும் சட்டவிரோதமாக காஷ்மீரின் ஒரு பகுதியை ஆக்கிரமித்துள்ள அதன் நிலை பற்றி இந்தியா திட்டவட்டமாக விவாதிக்கும் என்று இந்திய பிரதமர் அட்டல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

ஹரியானாவில் பேரணி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வாஜ்பாய் ஜம்மு காஷ்மீருக்கு சுய நிர்ணய உரிமை தேவை என் பதை உறுதியாக நிராகரித்தார். காஷ்மீர் பற்றிப் பேச விரும்பும் பாகிஸ்தானுடன் எப்படி அமை திப்பேச்சுக்களை நடத்த முடி யும் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் சர்வதேச சமூகம் இரட்டை நிலையை கடைப்பிடிப்பதாக குறைகூறிய பிரதமர் பயங்கரவாதத்தை இந்தியா தனியாகவே எதிர்த்து போரிட்டு தோற்கடிக்கும் எனத் தெரிவித்தார்.




காஷ்மீர் முதல்வர் முப்தி முகமத் மொகமது சையட்டின் வாசஸ்தலமருகே நடைபெற்ற தீவிரவாதிகளுடனான துப்பாக்கிச் சமரின் பின்னர் இந்தியப் படை வீரர் தமது ரைபிளை உயர்த்திக் காட்டுகின்றார்.

# எண்ணெய் களஞ்சியத்தில் தீ நைஜீரியாவில் பலர் பலி

நைஜீரியாவில் பிரதான எண்ணெய் களஞ்சியசாலை ஒன்றின் மீது எரிபொருள் திருடர்கள் தீவைத்ததில் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாக அரசாங்க எண்ணெய் கம்பனி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

தீ அணைக்கும் படையினர் பல மணி நேரமாகப் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்த போதிலும் அந்தப் பகுதியில் வெப்பம் அதிகரித்துள்ளமையால் அங்குள்ள இறங்குதுறைஒன்றை இராணுவத்தினர் சுத்திவளைத்து காவல் புரிந்து வருவதாகவும் தீயினால் எண்ணெய் விநியோக குழாய் ஒன்று சேதமடைந்துள்ளது என்று நைஜீரியா தேசிய பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பின்லேடன் உரையால் மீண்டும் பரபரப்பு; உலகின் ஆதரவை வெள்ளை மாளிகை கோரல்!

(வாஷிங்டன்)

ஒசாமா பின்லேடனின் உரை என்று நம்பப்படும் புதிய தொலைக்காட்சி நாடா ஒன்று ஒலிபரப்பப்பட்டதை அடுத்து அமெரிக்கா தலைமையிலான பயங்கரவாதம் மீதான யுத்தத்துக்கு ஆதரவு தருமாறு வெள்ளை மாளிகை உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிரியுடன் யுத்தத்தை தீவிரப்படுத்தப்போவதாகவும் வெள்ளை மாளிகை சூளுரைத்துள்ளது.

கட்டாரில் அமைந்துள்ள அரபு தொலைக்காட்சி நிலையமான அல்யசீராவில் இருந்து ஒளிபரப்பப்பட்ட பின்லேடனின் உரையில் அமெரிக்காவுக்கு உள்ளேயும், வெளியேயும் மேலும் பல தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை நடத்தப்போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் விவகாரம் குறித்து அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்து வரும் சகல நாடுகளிலும் இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்படும் என பின்லேடன் இந்த உரையில் எச்சரிக்கை செய் துள்ளார்.

பயங்கரவாதம் மீதான உலகளாவிய யுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதை இந்த உரை நினைவூட்டுகின்றது என்று வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கொட் மச்சிலன் கூறியுள்ளார்



சிகாகோவில் 6 பேர் இறக்கவும் 12 பேர் காயமேற்படவும் காரணமான நகர கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீயை அணைக்க முயலும் தீயணைப்பு வீரர்கள்.

# ஜே.வி.பி=சு.க.கூட்டு ஆட்சியைக் கைப்பற்றினால் தமிழீழத்தைப் புலிகள் இலகுவாகப் பெற்றுவிடுவர்

இலங்கையின் இனப்பிரச்சினை யுத்தத்தால் தீர்க்க முடியாது. சமாதான நடவடிக்கைகளால் தீர்க்க முடியும், இதனை இன்று ஆட்சி புரியும் ஐக்கிய தேசிய முன்னணி அரசும் எதிர்க் கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியும் உணர்ந்துள்ளது. இது இன்று நாட்டுக்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும் என கடந்த வாரம் சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிங்கப்பூர் பிரதமர் கெடொக் டொன் அவர்களுடன் நடந்த கலந்துரையாடலின் பொழுது தெரிவித்துள்ளார். சனாதிபதி சந்திரிகா சர்வதேச பிரஜைகள் முன்னிலையில் சிங்கப்பூரில் உரை நிகழ்த்தும் பொழுது யுத்தத்தை விரும்பவில்லை எனவும், மீண்டும் நாட்டில் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆயத்தமாக உள்ளோம் எனவும் சனாதிபதி மீண்டும் தெரிவித்துள்ளமை இனி நாட்டில் யுத்தத்தை விரும்பமாட்டார் என அவரின் பேச்சுக்களில் இருந்து நாம் நம்பலாம்.

அவ்வாறாயின் இந்த நாட்டில் உள்ள இரண்டு பிரதான கட்சிகளும் ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தால் இந்த இரு கட்சிகளுக்கும் 80 சதவீத மக்களின் ஆதரவு உண்டு எனக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் வடகிழக்கில் தமிழர்கள், முஸ்லிம்கள் ஒன்றுபட்டால் 90 சதவீதத்தினரின் ஆதரவு உண்டு. ஆனால் இன்று நாட்டில் யுத்தம் தேவைப்படுகிறது எனக் கூறுவது சிறிய கட்சிகளே ஆகும். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள சிலர் ஏனைய சிறு கட்சிகளுடன் இணைந்து இந்த நாட்டில் மீண்டும் ஒரு இனவாத யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் நாட்டின் தலைவி என்ற முறையில் தான் கூறியதைக் கைவிட்டால் சர்வதேச பிரஜைகள் முன்னிலையில் சனாதிபதி வகை சொல்லி ஆகவேண்டும். இது தவிர்க்க முடியாது. 2000 ஆம் ஆண்டு அரச யாப்பைத் திருத்துவதற்கு அவரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமக்குள்ள அதிகாரங்கள்

'தினமின'வில் ரகுமான் எழுதிய கட்டுரையில் இருந்து....

மொழியாக்கம்:-**சக்திவேல்**

சிலவற்றையும் அவர் பகிர்ந்தளித்தார். இன்று அவர் யுத்தத்தினால் எதையும் வெல்ல முடியாது என்பதை நன்கு உணர்ந்தவராகத் தற்பொழுது செயற்படுவதற்கு முன்வந்துள்ளமையை வரவேற்கிறோம். இந்த நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அவரின் தந்தை பண்டாரநாயக்க , தாயார் சிறிமாவோ இந்த இரண்டு பிரதமர்களைப் பார்க்கிலும் இவர் முன்னிலையில் இருக்கிறார். பண்டாரநாயக்கவும் யுத்தத்தினால் இந்த இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது சமாதான மார்க்கமாகத்தான் தீர்க்க முடியும் என உணர்ந்து பண்டா செல்வா ஒப்பந்தத்தை அமுல்படுத்த முன்வந்தார். கட்சியில் உள்ளவர்களின் எதிர்ப்பினால் அதை அமுல்படுத்த முடியவில்லை. ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியினரும் மாதக் கணக்கில் கதைத்தும் இப் பேச்சுவார்த்தைகள் சொந்தக் காரணங்களுக்காக முறியவில்லை என்றே கூறப்படுகின்றது. சந்திரிகா அம்மையார் இந்த இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கையாண்ட முறையை வைத்து இடையில் இப்பேச்சுவார்த்தை முறிவுற்றதற்குக் காரணமாகவும் கூறப்படுகிறது. அவ்வாறானால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு இந்த நாட்டின் இனப் பிரச்சினையை சமாதானமாகத்தான் தீர்க்க முடியும் என உணர்த்திய பெருமை சந்திரிகா அமையாருக்குத்தான் உண்டு. அன்று சனாதிபதியின் கணவர் விஜயகுமாரதுங்கவும், சந்திரிகாவும் அதிகாரப் பரவலாக்கல் மூலம்தான் நாட்டின் இனப்பிரச்சினைக்கு முடிவு கட்ட முடியும் எனக் கூறினார்கள். இந்த இனப் பிரச்சினையால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் அவரின் கணவர் கைது செய்யப்பட்டுச் சிறையில் பெரும் இன்னல்களை அனுபவித்தார். ஆனால், இவர்கள் இருவரும் அதிகாரப் பரவலாக்கல் என்ற திட்டத்திலிருந்து விலகாமல் மிக உறுதியாக நின்றனர். ஆனால் வடகிழக்கில் அதிகாரப் பரவலாக்கல் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எனப் பகிரங்கமாகக் கூறியது இலங்கையில் உள்ள இடதுசாரிக் கட்சிகளே ஆகும். அதன்பிறகு விஜயகுமாரதுங்க ஆரம்பித்த மக்கள் கட்சியும், அதிகாரப் பரவலாக்கல் திட்டமே நாட்டின் சமாதானத்திற்குச் சிறந்ததென உணர்ந்தார்கள்.







சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரில் சிலர் ஜே.வி.பியோடு இணைந்து அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசையோடு கட்சியின் சில கொள்கைகளையே மாற்றி அமைப்பதற்கு முன்வந்துள்ளனர். ஆனால் சந்திரிகா அம்மையார் அவர்களின் திட்டங்களுக்கு இடம்கொடுக்க மறுத்துவிட்டார். ஆனால் இன்று ஜே.வி.பியினரோடு அதிகாரப் பரவலாக்கலைக் கைவிட்டு இணைந்து கொண்டு செயற்பட்டால் தனது கட்சிக்கு வரும அபாயத்தை நன்கு உணர்ந்தார். ஜே.வி.பி. சுதந்திரக்கட்சியுடன் இணைவதால் 'சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளின் பெரும் எதிர்ப்பையும் தேட வேண்டிவரும். ஆனபடியால் ஜே.வி.பியினரின் இந்தத் திட்டத்தை தாம் நிராகரித்ததாகச் சர்வதேச சமூகத்திற்குக் கூறியுள்ளார். ஒரு முறை டைம்ஸ் ஆங்கில நாளிதழில் விடுதலைப் புலிகளுக்கு அதிகாரப்பரவலாக்கல் சம்பந்தமாக அறிவித்துள்ளேன் எனவும், அவர் யுத்தத்தை நிறுத்தினால், புலிகளுக்கு 10 வருடங்கள் வடகிழக்கைத் தேர்தல் இன்றி ஆளுவதற்கும் பொலிஸ் அதிகாரங்கள் அவர்களுக்குக் கொடுப்பதற்கும் நினைத்திருந்தேன் என்று கூறியிருந்தார். வடகிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது சிறந்த வழி என அவருக்குத் தென்பட்டது. தற்பொழுது இதையே ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்துகிறார். வடகிழக்கிற்கு அதிகாரப் பரவலாக்கலினால், அரசியல் தீர்விற்கு முடிவுகாண முடியும் என சந்திரிகா அம்மையார் உணர்ந்திருந்தார். இதை நாங்கள் எழுதுவது அவரை அரசியல் சங்கடத்தில் மாட்டி வைப்பதற்கு அல்ல, இது இலங்கை நாட்டுக்கு நிரந்தர சமாதானத்திற்கே ஆகும்.

அவர் அன்று விடுதலைப்புலிகளுக்கு 10 வருடகாலம் வடகிழக்கை ஆழ்வதற்கும், பொலிஸ் அதிகாரங்களையும் அவர்களிடம் கொடுத்திருந்தால் இன்று அவர் ஏனைய இனவாதக் கட்சிகளோடு கூட்டுச் சேர்வதற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால் இப்பொழுது விடுதலைப்புலிகள் சமஷ்டி தீர்வை ஏற்று வடகிழக்கு ஆட்சியை நடத்தினால் அதற்கு சனாதிபதி எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது.

சமஷ்டி முறையே இந்த நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிறந்த வழி என சனாதிபதி கூறி உள்ளபடியால், அவர் இந்த அதிகாரப் பரவலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார் என நம்பலாம். சிங்கப்பூரில் நடந்த சம்மேளனத்தில் அரசாங்கத்திற்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் தமது நிலைப்பாட்டை விபரமாக எடுத்துக்கூறி இருக்கின்றார். ஜே.வி.பியினர் அதிகாரப் பரவலாக்கலை விரும்பவில்லை. மற்றும் வடகிழக்கில் அரசியல் தீர்வையும் விரும்பவில்லை என்றால் அவர்களுடன் ஒப்பந்தம் செய்வதில் எந்த அர்த்தங்களும் கிடையாது. தற்பொழுது இரண்டு பெரும் கட்சிகளும் சமாதானத்தின் பெறுபேறுகளை பகிர்ந்து கொள்வோம் என அரசுக்கு கூறி உள்ளன. கொழும்புக்கு இம்மாதம் 24ஆம் திகதி மக்களைத் திரட்டி ஏற்படுத்தப்போகும் ஆர்ப்பாட்டம் தமது கட்சியின் பலத்தை ஜே.வி.பியினருக்கு மட்டும் அல்ல ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு காண்பிப்பதற்கே ஆகும். இன்னும் இரண்டு வருடகாலம் சனாதிபதி ஆட்சியிலிருப்பார். தாம் இந்த இரண்டு வருடகாலத்திற்கு இடையில் தமது பலத்தை கட்சியில் செலுத்தி கட்சியின் அதிகாரத்தை பெற்று புதிய அரசொன்றை ஏற்படுத்துவதற்கு கட்சியில் செல்வாக்கைப் பெறுவதற்கு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். தற்பொழுது சமாதான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு இருக்கும் பொழுது. எப்படியாவது அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே சிந்தனையோடு அனுராபண்டார நாயக்க செயற்பட்டு வருகின்றார். இம்முறை ஜே.வி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு இலகுவானதல்ல. அப்படி கூட்டுச்சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றினால், தமிழீழத்தை விடுதலைப்புலிகளுக்கு இலகுவாகப் பெறுவதற்கு வழிகளை அவர்களே வகுத்து கொடுப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பமாகும். சர்வதேச உதவியோடு ஈழத்தைப் புலிகள் பெற்றுக்கொள்வார்கள். ஆகையால் இவைகளைத் தடுப்பதற்கு சனாதிபதி தமது அதிகாரத்தை பாவிப்பதற்கு இடம் உண்டு. எனவே தற்போதைய அரசின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகங்கள் மத்தியில் விமர்சனம் செய்ய சனாதிபதி விரும்பமாட்டார். எதிர்க்கட்சித் தலைவி என்ற முறையில் அவருக்கும் கட்சியின் கொள்கை ஒன்று உள்ளது. அந்த அடிப்படையில் அவர் செயற்படுவதையும் தவிர்க்க முடியாது. சகல கட்சிகளும் தனது அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்ற கொள்கையோடு சனாதிபதி செயற்படுவார். ஆனால் மீண்டும் சமாதானத்தைக் குழப்பியடிப்பதற்கே இலங்கையில் எதிர்க்கட்சியினர் அரசாங் கத்திற்கு எதிர்ப்புக்களை தெரிவிக்கின்றனர். இதுவே நடைமுறையாக உள்ளது. இதை மாற்றுவது மிகவும் கஸ்டமாகும், இந்த நடைமுறையை அமுல்படுத்துவதற்கு ஜே.வி.பி விடாமுயற்சி செய்து வருகிறது. சனாதிபதி இந்த சமாதானத் திட்டத்திற்கு ஆதரவு தருவதாக சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் கூறியுள்ள நிலையில் வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகளின் ஆதரவை அவர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்து வாரானால் சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பை பெறுவார். □ □ □

## கடற்கரையோர பாதுகாப்பு வலயங்களை அகற்றி கடற்றொழிலில் ஈடுபட அனுமதி வழங்குக!

### -சிறிலங்காக் கடற்படையிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோரதீவுக் கடற்கரையோரப் பாதுகாப்பு வலயங்களை அகற்றி அப்பகுதியில் தம்மைத் தொழில் செய்வதற்கு அனுமதிக்குமாறு அப்பகுதி மீனவர்கள் சிறிலங்காக் கடற்படை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து இப்பகுதியை ஆக்கிரமித்துள்ள படையினர் இக்கடற்கரை ஓரத்தையும் மக்கள் வாழ்மனைகளையும் இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளதால் அப்பகுதி மீனவர்களின் மீள்குடியமர்வுக்கும் இயல்பான தொழிலுக்கும் முற்றாகத் தடை விதித்துள்ளனர்.

வெளி மாவட்டங்களில் இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்த இப்பகுதி மக்கள் தற்போது மீள்குடியமர யாழ்.மாவட்டத்திற்கு வந்து சேர்ந்துள்ளதால் இவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியதைத் தொடர்ந்தே அப்பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். இது ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் வெகுசனப் போராட்டங்களை முன்னெடுக்கவும் முஸ்தீபு செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (33)

## நாய்க்குட்டிகளால் சனாதிபதி நீண்டநாள் வாழமாட்டார்

### -ஜே.வி.பி. கருத்து

சில நாய்க்குட்டிகள் வைரசையும் புழுக்களையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மூளைக்குள் செலுத்தியிருப்பதால் நீண்ட நாட்களுக்கு அவர் சிறிலங்காவில் வாழமாட்டார் என ஜே.வி.பி பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நடந்த கூட்டம் ஒன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாய்க்குட்டிகள் சிலவற்றின் இசையமைப்பிற்குப் பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவம் ஆடிக்கொண்டிருக்கிறது.

நாட்டில் ஒழுங்கான அதிகாரப் பகிர்வு இருக்குமானால் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டுவிடுவார்கள் என்றும் கூறினார்.

## சரத் அமுனுகம பொ.ஐ.மு பேச்சாளர் அல்ல

### -ரி.எம்.ஜெயரத்ன அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம பொதுசன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் அல்ல என இம்முன்னணியின் பொதுச் செயலாளர் ரி.எம்.ஜெயரத்ன கூறியுள்ளார்.

இதற்குரிய பொறுப்பை அவர் தானாகவே எடுத்துக்கொண்டார் என ரி.எம்.ஜெயரத்ன கூறினார்.

இது சம்பந்தமாக மத்தியகுழு எந்த முடிவையும் எடுக்காத நிலையில் தான் பேச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகப் பத்திரிகைக்குப் பேட்டியளித்துள்ளார் என ஜெயரத்ன மேலும் கூறினார்.

## 'சிறீகோத்தாவை' புனரமைக்க பிரதமர் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் அடிமட்டத்தில் இருந்து புனரமைப்புச் செய்து அங்கு உயர் பதவிகளை வகிப்பதற்குப் புதுமுகங்களை அறிமுகப்படுத்துவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இப்புனரமைப்பு பிரதமரின் இந்திய விஜயம் முடிவடைந்தகையோடு செய்யப்படும் எனத் தெரியவருகிறது. அதற்கிடையில் மாகாண சபைத் தேர்தலுக்கு ஆயத்தமாகுமாறும் தீவிர பிரச்சார நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கும் பிரதமர் தீர்மானித்துள்ளார்.

"ஐ.தே.க. அரசின் 700 நாட்கள்" எனும் பொருளில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

# விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் பங்காற்றி மக்களைக் காத்தவர்கள் கூட்டுறவாளர்களே!

## கூட்டுறவாளர் சங்கமத்தில் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன்



(அலுவலக செய்தியாளர்)

**எமது மக்கள் பல இன்னல்களின் மத்தியிலும் பெரும் துயரங்களின் மத்தியிலும் இந்த விடுதலைப் போருக்கு முகம் கொடுத்த காலத்தில் எல்லாம் இந்த கூட்டுறவாளர்களே எங்கள் மக்களைக் காத்து நிற்க வேண்டிய பெரும் பணியை ஏற்றார்கள் என நேற்று முன்தினம் கிளி/இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வடகிழக்கு மாகாண கூட்டுறவாளர் சங்கம நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த விடுதலைப்போராட்ட காலங்களில் பல இன்னல்களுக்கு உள்ளான வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவாளர்களாகப் பெரும் பணியாற்றிய கூட்டுறவாளர்களுக்கே விடுதலைப்போராட்டத்தின் சுமைகள் அதிகமாக இருந்தது. எமது மண்ணில் எத்தனையோ இடப்பெயர்வுகளும் இடர்பாடுகளும் இவர்களை துரத்திவந்த போதெல்லாம் தோளிலே சுமந்து எமது விடுதலைப்போரோடு அவர்களும் விரைந்து கொண்டார்கள். இந்தக் கூட்டுறவாளர்களினது. கூட்டுறவுச் சங்கங்களினுடைய இத்தகைய அளப்பெரிய பணி சிறப்பானது.

இந்த விடுதலைப் போராட்டத்தின் 20 வருடகால போர்சூழலில் பல இன்னல்களை சுமந்த எமது மக்கள் இந்தக் கூட்டுறவுப் பணியினை முழுமையாக நம்பி வாழவேண்டிய நிலைகளும் ஏற்பட்டிருந்தன. அன்றைய பொழுதில் எல்லாம் பல இன்னல்களை சுமந்த இந்தக் கூட்டுறவாளர்கள் தங்கள் குடும்பங்கள் தங்கள் உறவுகள் எல்லாவற்றையும் மறந்து இந்த கூட்டுறவு சமூகமே தங்கள் குடும்பமாக பெரும் போர்கள் இடப்பெயர்வுகள் ஏற்பட்டபோ தெல்லாம் தாமும் இடம்பெயர்ந்து கொண்டே இருந்தார்கள்.

உண்மையில் எங்கெங்கோ இருக்கவேண்டிய கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் வன்னியிலே நிறுவி இங்கிருந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள். பல இன்னல்களை சுமந்து பெரும் துயரத்தின் மத்தியில் எங்களது மக்கள் விடுதலைப்போராட்டத்துக்கு முகம் கொடுத்த காலத்தில் எல்லாம் இந்த கூட்டுறவாளர்களே மக்களைக் காக்கவேண்டிய பெரும் பணியை ஏற்றார்கள். அதன்மூலம் இந்த விடுதலைப்போருக்கு பெரும் பணியை ஆற்றினார்கள்.

இந்த விடுதலைப்போராட்டம் எமது தேசத்தின் விடுதலைக்கானது தேசத்தின் உறவுகள் ஒன்றாககூடி சுதந்திரமாக வாழ்வதற்கானதேஇந்த விடுதலை போராட்டம். இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை அறுபது ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை இந்த தேசத்துக்கு உரமாக்கியுள்ளோம் 17917 மாவீரர்களை இந்த தேசத்திற்கு உரமாக்கியுள்ளோம். இந்த மண்ணில் மலர்ந்த நீங்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி இன்று பேராளராகக் கூடி கூட்டுறவு சங்கமத்தை நிகழ்த்தி இருக்கின்றீர்கள். இது எமக்கு உண்மையிலேயே மகிழ்வைத் தருகிறது.

இன்று நீங்கள் கூடியிருக்கின்ற இந்தப் பாடசாலை, எதிரியின் பெரும் தாக்குதல்களை சந்தித்திருந்தது. இந்தப் பாடசாலை எமது போராட்டத்தில் ஒரு பெரும் வரலாற்றை படைத்திருக்கிறது.எமது தேசமக்களின் வாழ்வுக்காக எமது தேசமக்களின் விடுதலைக்காக என்றும் தொடர்ந்து உழைப்போம் என்ற நம்பிக்கையில் இந்த விடுதலைப் போர் தொடர்ந்து செல்கிறது. இந்தப்போர் இன்று சமாதானத்தின் வழியாக நகர்ந்து செல்கிறது.

இந்தப் போரிலே நாங்கள் இற்றைவரை பெரும் இழப்புக்களின் மத்தியிலும் எங்கள் மக்களும் இந்த கூட்டுறவாளர்களும் மிகப் பெரிய சுமைகளை தமது தோள்களில் சுமந்து வாழ்ந்த பெரும் வரலாறு இருக்கின்றது. போர் என்கின்ற ஒரு சுமையை ஒரு தோளிலும் பொருளாதாரம் என்கின்ற ஒரு சுமையினை மறு தோளிலும் சுமந்து வாழ்ந்து இன்று ஓய்வான நிலையில் சமாதானப் பாதையில் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த சமாதானம் நிரந்தர, சமாதானமாக அமைவதோடு தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைத் தருகின்ற சமாதானமாகவும் இது அமைய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(லோ)

### விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை பகுதிகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நாளாந்தம் கொழும்புக்கு வரும் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் எடுத்து மேற்படி பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் ரணகல தெரிவித்துள்ளார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு சீருடையிலும், சிவில் உடையிலும் பொலிஸ்உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகஅவர் தெரிவித்தார்.

### சனாதிபதியை சந்திக்கமுடிவு

யாழ். குடாநாட்டில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் விவகாரம் தொடர்பாக படையினரால் கைதாகி காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் சிறிலங்கா சனாதிபதியை சந்தித்து பேச முடிவு செய்துள்ளது. விரைவில் இந்தச் சந்திப்பு இடம்பெறுமென சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### பிரதி சபாநாயகர் நவம்பரில் தெரிவு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் முதல் கிழமையில் பாராளுமன்ற பிரதி சபாநாயகரை தெரிவுசெய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப்பதவிக்கு அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் சிறிஅஸ்ர கெனடி தெரிவுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிசம்பர் 2001ம் ஆண்டிலிருந்து உதவிசபாநாயகராக எவரும் தெரிவு செய்யப்படவில்லை. இப் பதவி எதிர்க்கட்சியிடம் வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

# வடகிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைக்கு ஆயுதம் ஏந்தவேண்டிய அவசியமில்லை

## வன்னி மாவட்ட பா.உ.ரிசாத் பதியுதீன்

வடக்குக் கிழக்குமுஸ்லிம்களின் பிரச்சினை தீர்வுக்காக ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம் இல்லை. இருக்கும் அரசியல் பலத்தைக் கொண்டு பேச்சுவார்த்தை மூலம் முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மீள்குடியேற்ற செயலணி தலைவருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் இஸ்லாமிய இலாகா மண்டபத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற இலங்கை சட்ட உதவிகள் மன்றத்தின் முகாம் உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

வடமாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து 13 வருடங்களாகப் புத்தளத்தில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை. எனினும் பிரதமரின் முழுமையான சமாதான முயற்சிகளுக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. இதே போன்று வடபகுதி முஸ்லிம்களின் பிரச்சினைக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தீர்வைப் பெற்றுக்கொடுப்பார் என ரிசாத்பதியுதீன் குறிப்பிட்டார். (32)

# தீபாவளி தினத்தில் போராட்டம் நடைபெறுவதை இடைநிறுத்துக!

## இந்துமா மன்றம் வேண்டுகை

(கொழும்பு)

இந்துக்களின் புனித தினமான தீபாவளியன்று கொழும்பில் அரச எதிர்ப்பு ஊர்வலம் நடத்துவதை இடைநிறுத்த வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் சனாதிபதியிடம் அவசர வேண்டு கோள் ஒன்றை விடுத்துள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றம் சனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் இந்துக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வரும் இந்துக்கள் நிரந்தர சமாதானம்வேண்டி பிரார்த்தனையில் ஈடுபடும் தீபாவளி தினத்தன்று இவ்வாறானதொரு செயற்பாடொன்று நடைபெறுவதை சனாதிபதி தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்து மாமன்றம் கேட்டுள்ளது.

# சிறிலங்கா-இந்தியா இடையே வருடம் 100கோடி டொலர் வர்த்தகம்

(கொழும்பு)

சிறிலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே வருடாந்தம் 100கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகம் நடைபெற்று வருகிறதென அமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் தமக்குமிடையே கைச்சாத்திட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பயனாக அதிகரித்த வர்த்தகத்தை செய்து வருவதாக அமைச்சர் கருணாநாயக்க தெரிவித்தார். இந்திய வர்த்தக தூதுக்குழுடன் கொழும்பில் அமைச்சர் பேச்சுவார்த்தை நடாத்தினார். சிறிலங்காவுடன் சிறந்த வர்த்தகத்தை மேற்கொள்ளும் 22-வது நாடாக 1990ல் விளங்கிய இந்தியா கடந்த வருடம் 5ஆம் இடத்தைப் பெற்றதென அமைச்சர் கருணாநாயக்க தெரிவித்தார் எனினும் பரஸ்பரவர்த்தகம் இந்தியாவுக்கு சாதகமாக அமைந்திருக்கிறதென குறிப்பிட்ட அமைச்சர் கருணாநாயக்க கூடிய பொருட்களை சிறிலங்காவிடமிருந்து இந்தியா இறக்குமதி செய்ய வேண்டுமென அமைச்சர் இந்தியக் குழுவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# யுத்தநிறுத்தத்தின் விளைவால் கிழக்கின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

## - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தநிறுத்தத்தின் விளைவால் கிழக்கு மாகாணம் முழுவதிற்குமான பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதன் விளைவாக மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர் எனக் கூறிய அவர், கிழக்கு நிலைமையை விளக்கி அரசாங்கத்திற்கும் சனாதிபதிக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகக் கூறினார்.

தேசிய பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் கவனயீனமாக இருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் தம்மைப் பலப்படுத்தி வருகின்றனர் என மேலும் அவர் கூறினார்.

## கூட்டுறவுப் பேராளர் சங்கம நிகழ்வில்....

(படங்கள்-சோதி)






# அதிகாரப் பரவலாக்கலில் ஏற்பட்ட கருத்து மோதலே பேச்சுக்கள் முறிவடைய பிரதான காரணமாகும்!

## - ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர்

(கொழும்பு)

**தேசத்தைக் கட்டியெழுப்பும் கூட்டணி தொடர்பாக சிறில.சு.கவுடன் ஆரம்பித்த பேச்சுக்கள் முறிவடைந்ததற்கு பிரதான காரணம் அதிகாரப்பரவலாக்கலில் ஏற்பட்ட கருத்து மோதல்களே. அதிகாரப்பரவலாக்கலில் தடையை கைவிடுவதற்கு தயார் என்றால் நாம் மேற்சொன்ன கருத்துவேறுபாடுகளை பின்தள்ளிவிட்டு கூட்டணியமைக்க இன்னும் தயாராகவே இருக்கின்றோம் என ஜே.வி.பி யின் பிரச்சார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

கொலன்னாவயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறும்போது இன்று பகிர்ந்தளிப்பதற்கு சனாதிபதியிடம் அதிகாரங்கள் கிடையாது.அவ்வாறுஅதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது பிராந்தியங்களுக்கும் மாகாணங்களுக்கும் அன்றி மக்களுக்கே அதிகாரம் தேவை.

கூட்டணி ஏற்படுத்துவதானால் சிறில.சு.கட்சி தமது பகிர்வு கொள்கையை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும் அவ்வாறு அது விரும்பினாலும் விட்டாலும் கட்சி,நிறம் என்ற பாகுபாடின்றி புத்திஜீவிகளும், அரசியல் வாதிகளும், கலைஞர்களும் எமது பக்கமே நிற்கின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

"நாட்டை மலரச் செய்விப்போம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில் நாம் சிறில சுதந்திரக் கட்சியுடன் பேசியது சோஷலிசம் அல்ல, இந்த நாட்டை அடிபணிய வைக்கின்ற சக்திகளுக்கெதிரான மக்களைத்திரட்டிஎதிர்ப்புத் தெரிவிக்கவே ஆகும் அதனை சிறில.சு.க தவறாக புரிந்துள்ளது.

யானை-புலி கள்ள ஒப்பந்தத்தை யாரும் அறியவில்லை எனினும் நாம் அறிந்துவைத்துள்ளோம். பொ.ஐ.மு அரசு சமாதானம் பற்றி நன்மையாகக் கூறியது. நாம் யாருடைய பக்கமும் சாராமல் இலவச சமாதானிகள் அஹிம்சாவாதிகள் எனக் கூறிக்கொள்ளாமல் பிரிவினை வாதிகளிடம் அரசு மண்டியிட்டிருப்பதை மக்களுக்குக் கூறினோம். இந்த ஒப்பந்தம் சமாதானத்திற்கானது அல்ல ஈழ தானம். அரசின் கைகளைக் கட்டிவிட்டு பிரிவினை வாதிகளை அவிழ்த்து விட்டிருக்கும் சமாதானம். வடக்கு கிழக்கு புலிகளுக்கு, மிகுதி வெளிநாட்டவருக்கு, எமக்கு சமுத்திரம் தான் கடைசியில், இவ்வாறு அவர் உரையாற்றியுள்ளார்.

## சாரம்சம் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் காணாமல் போனவர்கள் பற்றிய அறிக்கையின் சாரம்சத்தை விசாரணைக் குழுவினர் எதிர்வரும் 28ல் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட குழுவினரே இந்த சாரம் சத்தை சமர்ப்பிக்கின்றனர்.

## மட்டக்களப்பில் படையினர் கெடுபிடி தீவிரம்; பொது மக்கள் பெரும் அசௌகரியம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொது மக்கள் மீதான கெடுபிடிகளை சிறிலங்காப் படையினர் அண்மை நாட்களாக அதிகரித்துள்ளனர்

மிதிவண்டிகள் மற்றும் உந்துருளிகளில் பயணிப்போரை பாதையில் வழிமறிக்கும் சிறிலங்காப் படையினர் அவர்களிடம் அனுமதிப்பத்திரங்களைக்கேட்டு தொந்தரவு செய்வதோடு வாகனங்களையும் துருவித்துருவி சோதனையிட்டு வருகின்றனர்.

அத்துடன் பாதசாரிகளின் பொதிகளையும் படையினர் சோதனைக்குட்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை வவுணதீவு சிறிலங்காப் படையினரின் சோதனைச் சாவடி ஊடாக மட்டக்களப்பு நகருக்குச் செல்லும் மக்களின் அடையாள அட்டைகளும்பயணப் பொதிகளும் சிறிலங்கா படைத்தரப்பால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர் நிறுத்த உடன்படிக்கை ஊடாக சமாதான சூழலில் சிறிலங்காப் படையினரின் இவ்வாறான நடவடிக்கை காரணமாக அரசு, அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பொது மக்களும் பலத்த அசௌகரியங்களை சந்தித்து வருகின்றமை நோக்கத்தக்கது.

## மாவீரர் கலாத்தன் நினைவாக நூல்நிலையம் திறந்து வைப்பு!

(மருதங்கேணி)

கடற்புலி லெப்.கேணல் கலாத்தன் /செங்கண்ணன் நினைவாக மருதங்கேணி இ.த.க. பாடசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டநூல் நிலையக்கட்டடம் நாளைதிறந்துவைக்கப்படவுள்ளது.

மேற்படி மாவீரர் அதே பாடசாலையில் கல்வி கற்று பின்தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து 21.10.2001 அன்று தமிழீழ கடற்பரப்பில் வீரச்சாவடைந்தார்

சுந்தரலிங்கம் ஸ்ரீகரன் எனும் அயற்பெயரைக்கொண்ட லெப். கேணல் கலாத்தன் /செங்கண்ணன் அவர்களின் பெற்றோரால் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி நினைவுக் கட்டடம் அவரது இரண்டாம் ஆண்டு நினைவு நாளான நாளை திறந்து வைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது. (11)

## உதவி பொலிஸ்மா அதிபர்களை நேரடியாக சேவையில் இணைப்பின் சட்ட நடவடிக்கை!

## -பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

நேரடியாக உதவி பொலிஸ்மா அதிபர்கள் நியமனம் செய்யப்பட்டால், தாம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியேற்படும் என பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த 08ஆம் திகதி பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் பிரதமரைச் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன் போது பிரதம மந்திரி விரைவில் உதவி பொலிஸ்மா அதிபர்கள் 30 பேரை நேரடியாக சேவையில் இணைத்துக் கொள்ளவிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இதனை பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் ஆட்சேபித்துள்ளனர். இவ்வாறு நேரடியாக உதவி பொலிஸ்மா அதிபர்கள் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுவதன் காரணமாக தமக்கு உதவி பொலிஸ்மா அதிபர்களாக பதவியுயர்வு பெறுவதில் தாமதங்கள் ஏற்படுவதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கைக்குண்டுத் தாக்குதலில் காயமடைந்தோர் விபரம்

(செட்டி குளம்)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் காயமடைந்த நால்வரின் பெயர் விபரங்கள் தெரிய வந்துள்ளது.

என்.லோகேஸ்வரன், பி.தவேந்திரன், கே.கேதீஸ்வரன், கே.விக்னேஸ்வரன் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்ற மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டமை தெரிந்ததே. (21)

## கொலை சந்தேக நபர்கள் கைது

சிலாபத்துக்கு இன்று விஜயம் செய்யவுள்ள இரு அமைச்சர்களை கொலை செய்யத் திட்டம் தீட்டினார்கள் என்ற சந்தேகத்தில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த இருவர் சிலாபம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து இரு கைக்குண்டுகள் , கத்திகள் மற்றும் கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, காமினி ஜயவிக்கிரம ஆகியோரே இன்று சிலாபத்துக்கு விஜயம் செய்கின்றனர்.

## பொ.ஐ.மு. பங்கேற்க மறுப்பு

(கொழும்பு)

நாளை நடத்த திட்டமிடப்பட்டுள்ள அரச,தனியார் நிறுவனங்களின் அரசுக்கெதிரான உத்தேச அடையாள வேலை நிறுத்தத்தில் பொ.ஐ.முன்னணி ஆதரவு தொழிற்சங்கம் கலந்து கொள்ள தீர்மானித்தாலும் அது ஜே.வி.பி.யின் அரசியல் நேக்கத்துக்காக நடத்தப்படும் ஒன்று என்பதால் அந்த வேலை நிறுத்தத்தில் தாம் பங்கு கொள்ளப் போவதில்லை என பொ.ஐ.மு தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் மயப்படுத்தலை கண்டித்தும் தொழிலாளர் சட்டங்களை கண்டித்தும் அரச ஊழியரின் சம்பளத்தை 50 வீதத்தால் அதிகரிக்கக் கோரியும் மேற்படி வேலை நிறுத்தம் நடைபெறவுள்ளது தெரிந்ததே.


## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1948 ☐ 06 ☐ 15

இறப்பு 2003 ☐ 09 ☐ 19



அமரர்

திரு. வல்லிபுரம் சுந்தர்லிங்கம்

நாவலர் வீதி,நெடுங்கேணி

(2 ஆம் வட்டாரம்,கோம்பாவில்,புதுக்குடியிருப்பு)

விதியின் கொடிய வலிமையை எண்ணி நோகிறது மனசு
இனியதை எல்லாம் சொல்லிவிட்டு
அண்ணன் நீ எங்கே சென்றாய்.
காலையில் நீ வந்து தம்பி,தங்கச்சி என்று
இனிமையான
தொனியில் சுகங்கள் விசாரிப்பாய் ஆனால்
உங்கள் சுகத்தை [illegible] சொல்லாமல் விதியல்லவோ
விசாரித்துவிட்டது
இனி எங்கே காண்பதாம் உமை பிரிந்து தவிக்கின்றோம்.
உங்கள் [illegible] பணியாளர்கள்.

அன்னாரின் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்துடன் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள்,பணியாளர்கள்,
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.

(சி-8661)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் படிப்பக திறப்பு விழாவும்

பிறப்பு 16 01 1975

வீரச்சாவு 21 10 2001



கடற்புலி லெப்.கேணல்

கலாத்தன்

(செங்கண்ணன்)

சுந்தரலிங்கம் ஸ்ரீகரன்

(மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு, யாழ்ப்பாணம்)

*சம்பவம்:- முல்லைக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையுடன் ஏற்பட்டமோதலின்போது.*

இவருடன் வீரச்சாவடைந்தவர்களுக்கும் இந்நாளில் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். இன்றைய தினம் அவரது வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்:- யா/மருதங்கேணி இ.த.வித்தி.
வடமராட்சி கிழக்கு.
காலம்:- 21.10.2003
நேரம்:- 12.00 மணி

கலாத்தனின் குடும்பத்தினர்

(3112)



## சிந்தனைக்கு

சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்கு முறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற் காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-10-2003

# வாக்குறுதிகள் பயனற்றவை!

யாழ். உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியேறுவது தொடர்பாக மூத்த அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் தீர்மானம் எடுப்பதாக தம்மைச் சந்தித்துப் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிமொழி அளித்துள்ளார். ஆனால் இது ஒன்றும் முன்னேற்றகரமான பதிலோ அன்றிப் புதியதொரு பதிலோ அல்ல.

புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அரசாங்கத்தரப்பு அடிக்கடி கூறிக்கொள்ளும் வாக்குறுதி இதுவே. ஆனால், உயர் பாதுகாப்பு வலய விடயத்தில் அரசாங்கமோ, சிறிலங்கா அயுதப்படைத்தரப்போ எந்தவிதமான விட்டுக் கொடுப்பிற்கோ அன்றி முன்னேற்றகரமானதொரு முடிவிற்கோ வந்ததில்லை.

தாய்லாந்தில் நடந்த மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் அமைக்கப்பட்ட பாதுகாப்பு உபகுழு பலதடவை கூடி ஆராய்ந்தபோதும், இவ்விடயத்தில் முன்னேற்றம் காணப்பட வில்லை.ஆயுதப்படைத்தரப்பு முன்னேற்றகரமான முடிவு எதற்கும் வரத்தயாராக இல்லாமையே இதற்குக் காரணமாகும். மாறாக புதிய நிபந்தனைகளைவிதிப்பதிலேயே அது அக்கறை காட்டி யுள்ளது.

அதுமாத்திரமல்ல, உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக் குடியேறுவது தொடர்பாக இந்தியாவின் முன்னாள் படை யதிகாரியான மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியாரிடம் அரசாங்கம் ஆலோசனை பெற்றபோதும் அதிலும் முன்னேற்றகரமான முடிவு எட்டப்படவில்லை, தொடர்ந்தும் உயர்பாதுகாப்பு வலயத்தில் மக் கள் மீளக்குடியேறுவதற்கு எதிரான நிலைப்பாட்டையே ஆயுதப்படைத்தரப்பு கொண்டிருந்தது. அரசாங்கமும் அதற்குச் செவிசாய்த்தே நடந்து கொண்டது.

இவைதவிர தற்போதைய சூழ்நிலையில், உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் -- குறிப்பாக பலாலி தளத்தைச் சூழ வுள்ள உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியில் 600 மீற்றருக்கு அப்பால் குடியேறியுள்ள மக்கள் எந்நேரத்திலும் வெளி யேறத்தயாராக இருக்கவேண்டும் என சிறிலங்காப் படைத் தரப்பு விடுத்துவரும் அச்சுறுத்தலானது உயர்பாதுகாப்பு வலயத்தில் மட்டுமல்ல, அதற்கு வெளியிலும் மக்கள் மீளக்குடியேறுவதற்கு ஆயுதப்படைத்தரப்பு முட்டுக்கட்டையாகவும் அச்சுறுத்தலாகவுமே உள்ளது என்பது வெளிப்படையாகின்றது.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அதிகாரிகளுடனோ மூத்த அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை மூலம் உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியேறுதல் தொடர்பான விடயத்தில் முன்னேற்றகரமான தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படும் என எதிர்பார்த்தால் அது ஏமாற்றம் தரும் ஒன்றாகவே இருக்கும். ஏனெனில் படைத்தரப்பிடம்இருந்து அரசாங்கம் இதற்குச் சாதகமான பதிலைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லை.

ஆனால், இது எதிர்பார்க்கக்கூடிய விடயமாகையால் தமிழர் தேசியக்கூட்டமைப்பு இவ் விவகாரம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கோரிக்கை விடுவதோ, பிரதமர் அளிக்கும் வாக்குறுதியில் திருப்தி அடைந்து திரும்புவதினாலோ இவ் விவகாரம தீர்க்கப்பட்டுவிடப்போவதில்லை, ஏனெனில் அர சாங்கத்திடம் இருந்து முன்னேற்றகரமான முடிவுகள் வருவதற்கான வாய்ப்பில்லை.

ஆகையினால் இத்தகைய விவகாரங்கள் குறித்துப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அதற்கு முன்னதாகவே இவ்விவகாரம் குறித்து எத்தகைய நிலைப்பாட்டை மேற்கொள்ளுதல் என்பது தொடர்பான உறுதியான நிலைப்பாட்டினைத் தமிழர் தேசியக்கூட்டமைப்பினர் எடுக்கவேண்டும். அதன் பின்னர் பிர தமரைச் சந்திக்கவேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் இன்று பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க நாளை சனாதிபதியாக மாறினாலும் கூட இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படப் போவ தில்லை.

இதனால், உயர் பாதுகாப்பு வலயம் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக பேசவிழையும்போது சந்தித்தோம் ; பேசினோம் ; வாக்குறுதிகள் தரப்பட்டன என்பனவற்றுடன் திருப்தி அடைந்து விடுதல் முடியாது. அரசாங்கத்திடம் இருந்து உறுதியான நடவடிக்கைக்குரிய வாக்குறுதிகளைப்பெறுதல் வேண்டும். மாறாக அரசாங்கம் இழுத்தடிக்கும் நோக்கம் கொண்டதாகவோ, நழுவல்போக்கை வெளிப்படுத்துவதுமாகவோ இருக்குமானால் தமிழர் தேசியக் கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டை /எச்சரிக்கையை அரசாங்கத்திற்கு விடுத்தலோ அன்றி நினைவூட்டுதலோ அவசி யமானதாகும்.

ஆனால், தமிழர் தேசியக்கூட்டமைப்பினர், ஆளும் தரப்பின்மீது எப்பொழுதுமே அழுத்தத்தைப் பிரயோகிப்பது இல்லை. பொதுவில் அவர்கள் ஒரு நழுவல்போக்கைக் கைக்கொள்வது போன்றே நடந்து கொண்டனர். இது அரசாங்கத்தரப்பிற்கு எப்பொழுதும் வாய்ப்பாகவும், தமிழ் மக்களுக்கு பாதகமானதொரு நிலையையும் தோற்றுவிப்பதாகவே இருந்து வந்துள்ளது.

# வடக்கு-கிழக்கை மீளக் கட்டியெழுப்ப ஐரோப்பிய ஒன்றியம் உதவியளிக்கும்

## -இலங்கைக்கான பிரதிநிதி வோல்ட்டர் வில்டன்

(அம்பாறை)

இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கும் வடக்கு-கிழக்கு மாகாணத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் மிகக் கூடுதலான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கும். இதன் முதற்கட்டமாக கிழக்கு மாகாண ரயில்வே போக்குவரத்துத்துறையை மீளமைக்கவும், மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்யவும் 62 மில்லியன் யூரோ நாணயங்களை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கவுள்ளதாக ஐரோப்பிய ஆணைக்குழுவின் இலங்கை மாலைதீவுகளுக்கான பிரதிநிதி வோல்ட்டர் வில்டன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் உலக நாடுகள் கூடுதலான அக்கறை செலுத்தி வருவதாகவும், இந்தப் பணிக்கு ஊடகவியலாளர்கள் பக்கச்சார்பின்றி நடுநிலையாக இருந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கூடாக இலங்கையில் பத்திரிகை ஊடக சுதந்திரம் பேணப்படுவது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் திருப்தி அடைவதாக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வோல்ட்டர் வில்டன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# 10 லட்சம் பேரை கொழும்புக்கு அழைத்த பின்னர் அரசின் தலைவிதியை சனாதிபதி நிர்ணயிப்பார்

## —சு.க. தொகுதி அமைப்பாளர் கூறுகிறார்

(கொழும்பு)

இம்மாதக் கடைசியில் 10 லட்சம் ஐ.தே.க. எதிர்ப்பு மக்கள் வெள்ளத்தை கொழும்புக்கு அழைத்து வந்த பின்னர் ஆளும்கட்சியின் தலைவிதியை சனாதிபதி நிர்ணயிப்பார் என அரநாயக்க தொகுதி சிறில.சு.க.வின் அமைப்பாளர் லலித் திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற மாதாந்த கூட்டம் ஒன்றில் அவர் மேலும் கூறுகையில், பொய்யான வாக்குறுதிகளை அளித்து பதவிக்கு வந்த இவ்வரசாங்கத் திற்கு எதிராக அண்மைக்காலமாக பல்வேறு எதிர்ப்பலைகள் தோன்றியிருப்பதாகவும் அது தற்போது உறுதியாகியிருப்பதாகவும் கூறியுள்ளார். அன்று எமது சுதந்திரக்கட்சிக்கு ஏற்பட்ட நிலை இவ்வரசுக்கு ஏற்படும் எதிர்வரும் மாதங்களில் அம்மாற்றம் நிகழ்வது உறுதி. ஜே.வி.பி. சிறில.சு.கட்சி கூட்டணி ஏற்படுவதில் மாற்றமில்லை. இவ்வாறு லலித் திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

# இலங்கை கடற் பிரதேசத்தில் மீன்பிடிக்க வெளிநாடுகள் எவற்றுக்கும் அனுமதியில்லை

## -கடற்றொழில் அமைச்சு கூறுகிறது!

(கொழும்பு)

இலங்கை கடற்பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு எந்தவொரு வெளிநாட்டுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்று சிறிலங்கா கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகள் சர்வதேச கடற்பரப்பில் பிடிக்கும் மீன்களை இலங்கையில் கப்பல்களில் இருந்து இருக்கமுடியும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விதம் இறக்கப்படும் மீன்களுக்கு ஒரு கிலோவுக்கு 20 ரூபா வீதம் கட்டணம் அறவிடப்படுவதாகவும் அந்த மீன்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகின்றன என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# தென்மராட்சியில் படையினரால் தடுக்கப்பட்ட பேருந்து சேவைகளைஆரம்பிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாகப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பேருந்து சேவையை மீள ஆரம்பிப்பதற்கு, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேம்பிராய், மந்துவில், இந்நாலை, வரணிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதிகளூடாக நடைபெற்று வந்த சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறைக்கு இடையிலான தனியார் மற்றும் அரச பேருந்து சேவைகள் 1995ஆம் ஆண்டு இப்பகுதியை படையினர் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து படையினரால் தடை செய்யப்பட்டிருந்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் தொடர்ந்து இப்பகுதிகளில் மக்களை மீளக் குடியமர அனுமதித்த படையினர் பேருந்து போக்குவரவிற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவதால் தமது போக்குவரவு பெரும் சிரமத்தின் மத்தியில் இரட்டிப்பு வழிப்பயணம் செய்ய வேண்டியிருப்பதைக் காரணங்காட்டியுள்ள மக்கள் இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகள் படைத்தளபதிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியுள்ளனர். (33)

# கொங்கொங் சிக்சஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி எட்டு நாடுகளின் அணிகள் பங்கேற்பு

## - சாம்பியனுக்கு 80 ஆயிரம் டொலர் பரிசு

(கொங்கொங்)

சிக்சஸ் கிண்ணகிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதற்காக சிறிலங்கா அணி இம் மாதம் 30ஆம் திகதி கொங்கொங் செல்லவுள்ளது.

நவம்பர் முதலாம், இரண்டாம் திகதிகளில் இப்போட்டி கொங்கொங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் மொத்தம் இரண்டு இலட்சத்து 60 ஆயிரம் டொலர்கள் பரிசாக வழங்கப்படவுள்ளது.

8 நாடுகளின் கிரிக்கெட் அணிகள் பங்குபற்றவுள்ளன. பங்களாதேஷ் அணியும் இப் போட்டியில் பங்குபற்றுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இறுதி நேரத்தில் இவ் அணியின் பெயர் போட்டி அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டு அவ்விடத்திற்கு கென்ய அணியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.


இப்போட்டியில் 8 அணிகளும் இரு பிரிவுகளாக்கப்பட்டன. ஏ-பிரிவில் பாகிஸ்தான், இந்தியா, இங்கிலாந்து, கொங்கொங் அணிகளும், பி-பிரிவில் சிறிலங்கா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, கென்ய அணிகளும் இடம்பெறுகின்றன.

இப்போட்டியில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்படும் அணிக்கு 80 ஆயிரம் அமெரிக்க டொலர்களும், இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களும், 3ஆம், 4ஆம் இடங்களைப்பிடிக்கும் அணிகளுக்கு முறையே 35 ஆயிரம், 30 ஆயிரம் டொலர்களும்; 5ஆம், 6ஆம் இடங்களைப்பிடிக்கும் அணிகளுக்கு முறையே 25 ஆயிரம்; 20 ஆயிரம் டொலர்களும் வழங்கப்படவுள்ளன.

# இந்தியா பெரும் போராட்டம் தொடர் சமநிலையில் முடியலாம்!

இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கிடையில் மொகாலியில் நடைபெறும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4ஆம் நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி தனது முதலாவது இனிங்சில் 6 விக்கெட்டுக்களை இழந்து 390 ஓட்டங்களை எடுத்துள்ளது. நேற்று முன்தினம் 1 விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டம் என்ற நிலையில் ஆட்டத்தைத் தொடங்கிய இந்திய அணி முதல் இரண்டு ஓவரில் 130 ஓட்டங்களை எடுத்த செவாக்கையும், 13 ஓட்டங்களைப் பெற்ற ராவிடையும் இழந்து பரிதாப நிலைக்குள்ளாகியது. பின்னர் ஆடிய வீரர்களுள் லக்ஸ்மனும் டெண்டுல்கரும் ஓரளவு சிறப்பாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை சற்று உயர்த்தினர். டெண்டுல்கர் 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததும் அணி திக்குமுக்காடியது. யுவராஜ்சிங் 20 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். லக்ஸ்மனுடன் அனில்கும்ளே களத்தில் உள்ளார். அது "பொலோ ஒன்"னைத் தவிர்க்க மேலும் 40 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் இன்று இறுதி நாள் ஆட்டத்தைத் தொடங்கும் இப்போட்டியில் நியூசிலாந்து வீரர்களின் பந்துவீச்சும் களத்தடுப்பும் குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. இது 15 ஓவர்களில் வெறும் 19 ஓட்டங்களை மட்டுமே கொடுத்திருந்தது.

எனினும் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சர்வதேசம் தீர்வைத் திணிக்காது

## ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தெரிவிப்பு

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகம் எந்தவொரு தீர்வையும் பலாத்காரமாக திணிக்கமாட்டாதென ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்ட அவர் மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற சந்திப்பொன்றில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கையில் நிலவும் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதனை மக்கள் தமக்குள்ளேயே பேசித் தீர்க்க வேண்டும். ஆலோசனைகளையும், ஒத்துழைப்புகளையும் சர்வதேச சமூகம் வழங்கும் அடுத்த கட்ட பேச்சுகளுக்கான நகர்வில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு அதிகரிக்கும். இலங்கையை பொறுத்தவரை பல்லின சமூகம் என்ற ஒரு கட்டமைப்பு உள்ள நாட்டில் ஒரு சமூகம் மற்றுமோர் சமூகத்தில் தங்கி வாழ்வது வழமை. ஆனால் எந்தவொரு நாட்டிலும் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை அடக்கி ஆள முற்படுவதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்காதென அவர் மேலும் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்திற்கான பயணத்தை மேற்கொண்ட அவர் அங்கு தமிழ முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கட்சியின் பேரணியில் ஐ.தே.க. பா.உ.கள் பங்கேற்பராம்!

## மங்கள சமரவீர நம்பிக்கை

எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்க எதிர்ப்புப் பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர்களும் பங்கேற்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இணையத்தளம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை சனாதிபதிக்கு எதிராகத் தொடர்ந்தும் செயற்பட்டால், நாட்டு மக்களுக்கு அது நன்மை பயக்கமாட்டாது. எனவே பிரதி புதன்கிழமைதோறும் அமைச்சரவையில் சனாதிபதியுடன் இணைந்து அபிவிருத்தித் தீர்மானங்களை மேற்கொள்வதாக அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (32)

### சு.க...

ஒழுங்கு செய்வதற்கு மங்கள சமரவீரவை நியமித்துள்ளார். இந்த எதிர்ப்புக் கூட்டத்தில் பத்துலட்சம் அங்கத்தவர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், இவர்கள் எதிர்பார்க்கும் மக்கள் தொகையை கொழும்பிற்கு வரவழைப்பது மிகக் கஷ்டமான காரியம் எனத் தெரிவித்துள்ளார்.

### கடற்புலிகளைச்...

உத்தரவைப் பொலிசாருக்கு அவர் பிறப்பித்துள்ளார்.

உரிய அறிவிப்புக்கள் ஏதும் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைக்கு வழங்கப்படாது இடம்பெற்ற இக்கைது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின், கவனத்திற்கும் உடனடியாக கொண்டுவரப்பட்டது.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் மணற்காடுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணற்கொள்ளையிலீடுபட்டு வந்த கும்பல் ஒன்றினை எச்சரித்தமை தொடர்பான புகார் ஒன்றின் அடிப்படையில் குறித்த போராளியைக் கைது செய்ய பருத்தித்துறைப் பொலிசார் கடந்த ஒருசில மாதங்களுக்கு முன்னரும் முற்பட்டிருந்தனர்.

எனினும் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை தலைமைக்கு அறிவிக்காது தன்னைக் கைது செய்ய மேற்கொண்ட முயற்சிகளுக்கு அவர் ஒத்துழைக்காமையினால் அவரை பலாத்காரமாகக் கைது செய்ய பருத்தித்துறை பொலிசார் அப்போது மேற்கொண்டிருந்த முயற்சியும் தோல்வியடைந்திருந்தது. (27)

### பிரதமர்...

டில்லியை நோக்கிப் புறப்பட்டுச் சென்றதாகக் கட்டுநாயக்க தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை பிரதமர் தமது விஜயத்தின் போது இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து முக்கிய பேச்சு நடத்துவார் என கொழும்பின் ஆங்கில ஊடக இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (32)

### ஆயுதங்களுடன்...

தாக, ஜயந்த பெரேரா குறிப்பிட்டார். இந்தக் கப்பல் முல்லைத்தீவுக் கடலில் இருந்து, இருநூற்று இருபத்து ஐந்து கடல் மையதூரத்தில் தரித்து நின்றதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையின் இந்தத் தகவல் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவைக் கேட்டபோது இதற்குப் பதிலளித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் கடற்படையின் குற்றச்சாட்டை மறுத்துரைத்தார். இவ்வாறான சம்பவம் குறித்து உரிய ஆதாரங்கள் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை சம்பவம் தொடர்பாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி சனாதிபதிக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ்விவகாரம் தொடர்பாக நேரடியாக விளக்கத்தைக் கேட்டுக்கொள்வதற்காக கடற்படைத் தளபதி தயா சந்தகிரியையும் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி கருணா கொடவையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்றுகாலை தன்னைச் சந்திக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். (32)

# மேஜர் ஈழப்பிரியா நினைவாக கராத்தேப் போட்டி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் மேஜர் ஈழப்பிரியா நினைவாக கராத்தே சுற்றுப் போட்டி இன்று காலை கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தமிழீழத்திலுள்ள எட்டு மாவட்ட வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளும் 2ஆவது தேசிய கராத்தே சுற்றுப் போட்டி இன்றும், நாளையும், நாளை மறுதினமும் கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கராத்தே சுற்றுப் போட்டியினை அனைவரும் கலந்து கண்டுகளிக்கும் வண்ணம் தமிழீழ விளையாட்டுத் துறையினர் வேண்டியுள்ளனர். (சோ)

# இந்திய படைத்துறை உயர்குழு கொழும்பிற்கு வருகை

(கொழும்பு)

சிறிலங்காப் படையினரிற்கு வழங்க வேண்டிய உதவிகள் குறித்து ஆராய்வதற்காக இந்தியபடைத்துறை அதிகாரியைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று கொழும்பிற்கு விஜயம் செய்துள்ளது. சிறிலங்காப் படையினருக்குப் பயிற்சி மற்றும் பல்வேறு உதவியை வழங்கும் திட்டத்திற்கு அமையவே படைத்துறை உயர் அதிகாரிகள் குழு கொழும்பிற்கு வந்துள்ளது. இந்த உயர்மட்டக் குழு படைத்துறை உதவிகளை எவ்வாறு வழங்கலாம் என்பது குறித்தும் விரிவாக ஆராய்ந்து இந்திய அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

### வட-கிழக்கு....

டில்லா தெரிவித்துள்ளார். நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இப் பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்பட்டு வாக்களிப்பிற்கு விடப்படு மெனவும், அதற்கு ஆதரவு பெறும் நோக்கிலேயே இப் பேச்சுவார்த்தை இடம்பெறுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலின் போது இடைக்கால நிர்வாகசபை வட-கிழக்கு மாகாணத்தில் தற்போதைய நிலை உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

### புலிகள்...

களின் அதிகாரங்கள் தொடர்பில் ஆராயப்படலாம் என கூட்டமைப்பு வட்டாரத் தகவல்களை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

### வெடி...

பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கி.றதீஸ் (வயது-13) என்ற சிறுவனே காயமடைந்து கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: சம்பவதினத்தன்று அதே இடத்தில் உள்ள தனது வீட்டருகில் உள்ள தோட்டக் காணி ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்த வேளை நிலத்தில் புதைந்து கிடந்த வெள்ளி நிற குப்பி ஒன்றின் மீது மண்வெட்டியால் வெட்டிய போது அது வெடித்துச் சிதறியத்தில் அவரது கால்பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளது. (33)

### முஸ்லிம்...

ஏற்பாட்டிலேயே இக்குழு பிரித்தானியாவிற்கு விஜயம் செய்து திட்ட வரைவு குறித்து ஆராயவுள்ளது.

பிரித்தானியா செல்லவுள்ள இக்குழுவினரை சிறிலங்காவிற்கான பிரித்தானிய பிரதித் தூதுவர் பீற்றர் றெயூட் அழைத்துச் செல்லவுள்ளார். பிரித்தானியாவில் நவம்பர் முதலாம் திகதி வரை தங்கவுள்ள இக்குழுவினர் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து உட்பட பல்வேறு இடங்களுக்குச் செல்லவுள்ளனர்.

இக்குழுவினரை எதிர்வரும் 30ஆம் திகதி பிரித்தானிய-சிறிலங்கா பெடறல் கட்சி அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திறிகாடினர் உட்பட பலர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இதேவேளை, இக்குழுவினர்களைச் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். இக்குழுவினரை எரிக் சூல்ஹெய்ம் வரும் 30 ஆம் திகதிசந்திக்க ஏற்பாடுகளைச் செய்து தருமாறு நோர்வேத் தூதரகம் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவுள்ள மாற்று யோசனையில் முஸ்லிம்கள் குறித்த ஏற்பாடுகளை விரிவாக ஆராய்ந்து அதற்குப் பொருத்தமான இணக்கப்பாட்டையோ அல்லது மாற்று யோசனைத் திருத்தங்களையோ சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசிற்கு சமர்ப்பிக்கும் வரை சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க மாட்டாது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஐ.நா...

சென்ற இராணுவத்தினரே இந்தப் பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து கண்டி காவல்துறையினர் இவர்கள் இருவரையும் கைது செய்து நேற்று கண்டி மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதவான் இவர்கள் இருவரையும் எதிர்வரும் இருபத்து மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (32)

# புதிய வரவு - செலவுத்திட்டத்தில் 'மற்' வரி அறிமுகப்படுத்த முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் ஆகக் குறைந்த சராசரி கிட்டியவரி (Mat) அறிமுகப்படுத்தப்படவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வருமான வரியிலிருந்து தப்பிக் கொள்ளும் வர்த்தகர்களையும் வரி செலுத்தச் செய்யும் வகையிலேயே இந்த 'மற்' வரி அறிமுகம் செய்யப்படவிருக்கிறது.

இதன்கீழ் நஷ்டம் ஏற்படுவதாகக் கூறும் வர்த்தக நிறுவனம் ஒன்று ஆகக் குறைந்த வரியை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டியிருக்கும்.

இதேவேளை, இந்த வரி அறிமுகப்படுத்தப்படுவதன் காரணமாக நடைமுறையில் இருக்கும் வற் எனப்படும் பெறுமதி சேர் வரி விலக்குக் கொள்ளப்படுமா? என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை. (32)

# வவுனியா கல்வியியற் கல்லூரியின் பத்தாண்டு நிறைவு நிகழ்வுகள்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் பத்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 1993ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பத்தாம் ஆண்டு நிறைவுபெறும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் மாலை 3.30 மணிக்கு கல்லூரி பீடாதிபதி க. பேர்ணாட் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளினதும் பிரதம ஆணையாளர் செல்வி டி. ஆர். இ. கஜநாயக்க அவர்கள் பிரதம விருந்தினராகவும், வவுனியா அரச அதிபர் க. கணேஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன், யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்லூரியின் கல்விச் சேவையை எடுத்துக் காட்டும் "வித்தியா தீபம்" என்ற நூலினை பிரதம விருந்தினர் செல்வி டி.ஆர். கஜநாயக்க வெளியிட்டு வைக்க முதற் பிரதியை வவுனியா இந்து மாமன்றத் தலைவர் சி. எஸ். இராமசாமி பெற்றுக்கொண்டார். (10)

### கொபி...

கேந்திரனுக்கு செயலாளர் நாயகம் கொபி அனானின் அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் செயலாளர் நாயகம் கொபி அனானின் இலங்கைக்கான விஜயம் கைவிடப்படவில்லை எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


பதவி வெற்றிடம்

ஒப்புநோக்குநர்

ஈழநாதம் நாளேட்டில் ஒப்புநோக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். மாதாந்த வேதனம் 4000 ரூபா வழங்கப்படும். எதிர் வரும் 26-10-2003 அன்று காலை 10.00 மணிக்கு ஜெயந்திநகரில் உள்ள ஈழநாதம் பணிமனைக்கு நேரில் வருமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகம்


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.